விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 20 வெள்ளிக்கிழமை (06.10.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 282

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## பகிஷ்கரிப்புப் போராட்டம் நிறுத்தம் திங்கள் முதல் பாடசாலைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன.யாழில் கற்றலுக்குரிய சூழல் தோன்றாவிடினும் க .பொ.த.சாதாரண தரப் பரீட்சை, ;புலமைப்பரிசில் பரீட்சை போன்றவற்றைக் கருத்திற் கொண்டு தமது பகிஷ்கரிப்புப் போராட்டத்தை கைவிடுவதாக தமிழ் மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

க.பொ.த.சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் எதிர்வரும் திங்கட்கிழமையும் ,ஏனைய மாணவர்கள் எதிர்வரும் புதன்கிழமையும் பாடசாலைக்குச் சமுகமளிப்பர் என தமிழ் மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அவ் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு, குடாநாட்டில் 08.09.2006 முதல் கற்றல் -கற்பித்தல் தவிர்ப்புக்களை மேற்கொண்டுவரும் மாணவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக அரச அதிபர் ,யாழ்.ஆயர், கல்விப்பணிப்பாளர்கள், பல்கலைக்கழக ஆசிரிய சமூகத்தினர் போன்றோரிடம் பல சந்திப்புக்களை நடாத்தினோம். எமது பிரச்சி (04 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சி இல்லாத ஜனநாயக அரசு

## ஒத்துழைப்புடன் இணைந்து செயற்பட

## ஐ.தே.கட்சி - சுதந்திரக் கட்சி இணக்கம்

## 15 ஆம் திகதி ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

பொது வேலைத்திட்டம் தொடர்பில் ஒத்துழைப்புடன் இணைந்துசெயற்படுவதற்குஆளும் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் பிரதான எதிர்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியும் இணக்கம் கண்டுள்ளன.

இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் இம் மாதம் 15 ஆம் திகதி கொழும்பில் கைச்சாத்திடப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருட்களின் விலை குறைப்பு

(கொழும்பு)

எரிபொருட்களின் விலைகள் மீண்டும் குறைக்கப்பட்டுள்ளன. உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 2 (04 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கிளைமோர்

(வவுனியா)

வவுனியா நாம்பன் குளம் பகுதியில் இராணுவத்தினரை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் இராணுவ வீரர் ஒருவர் (04 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஒக். 28,29 இல் சுவிஸ்லாந்தில்!

### நோர்வேயிடம் அரசு யோசனை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தையை சுவிஸில் எதிர்வரும் 28,29 ஆகிய திகதிகளில் நடத்தலாம் என்று நோர்வே சிறப்புத்தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயரிடம் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று தெரிவித்துள்ளதாவது; அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை ஒக்டோபர் 28 ,29 ஆம் திகதிகளில் சுவிஸ்லாந்தில் நடத்தப்படவேண்டும் என அரசாங்கம் ஆலோசனை தெரிவித்துள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக நோர்வே விசேட தூதுவர் ஹான்சன் பௌயரிடம் தமிழீழ (04 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலைப் பகுதிகளில் தொடர் ஷெல் தாக்குதல்

(கொழும்பு)

முகமாலை ,எழுதுமட்டுவாள் மற்றும் நாகர்கோவில் இராணுவத்தின் முன்னரங்க காவலரண்களின் மீது விடுதலைப்புலிகள் நேற்று அதிகாலை 3 மணிமுதல் 4.45 மணிவரை மோட்டார் மற்றும் ஆட்லறி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இதன்போது 9 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர் எனவும் அவர் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் ஆட்லறி மற்றும் ஷெல் தாக்குதல்களை நேற்று பிற்கல் வரை (04 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அமைச்சிற்கு கூடுதலான நிதி ஒதுக்கீடு!

### 2007ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில்

(யாழ்ப்பாணம்)

2007 ஆம் ஆண்டிற்கான பாதுகாப்புச் செலவீனம் 45 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்திற்கான ஒதுக்கீட்டு சட்ட மூலமுன்அறிவித்தலை நேற்று பிரதமர் பாராளுமன்றத்தில் சமர்பித்தார்.

2007 ஆம் ஆண்டு ஒட்டுமொத்தமாக தனது செலவீனத்தை 40 வீதமாக அதாவது ரூபா 804.643 (04 ஆம் பக்கம் பார்க்க)

# வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் குடும்ப அடையாள அட்டை பதிவு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் ஒவ்வொரு குடும்பங்களிற்கும் குடும்ப அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகின்றது.

இதற்காக கிராம சேவையாளர்களினாலும் ஒவ்வொரு குடும்பங்களும் படம் எடுக்கப்படுகின்றனர்.

இதற்காக ரூபா 75 அறவிடப்படுகிறது. தற்போதைய கஷ்டமான சூழ்நிலையில் இந்தக் கட்டணத்தைச் செலுத்துவதில் பல குடும்பங்களுக்குச் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இக் கட்டணத்தைச் செலுத்துவது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (எ-1)

# தொழில்நுட்ப அலுவலர் தரம் II 'ஆ' ஆட்சேர்ப்புக்கான பரீட்சை

## பரீட்சார்த்திகள் விபரம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இலங்கை தொழில் நுட்ப சேவையும் தொழில் நுட்ப அலுவலர் தரம்II 'ஆ' பிரிவுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சையின்படி இரண்டாவது பட்டியல் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரினால் பக்ஸ் மூலம் மாவட்ட செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

'அப்பட்டியல் மூலம் தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 9.00-10.30மணிக்கிடையில் கொழும்பு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் (8 ஆம் மாடி) நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும்படி கோரப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்குரிய அழைப்புக் கடிதங்கள் யாழ்.மாவட்ட செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கொழும்புக்கான பயண அனுமதி தொடர்பான பதிவுகளை உடனடியாக மாவட்டச் செயலக திட்டமிடல் பகுதியில் மேற்கொள்ளும்படி பரீட்சார்த்திகளை யாழ்.அரச அதிபர் க. கணேஷ் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகளின் பெயர் விபரம் வருமாறு;

எம்.சிவதாசன்(சங்குவேலி வடக்கு , மானிப்பாய்), எம்.பாலதாஸ்( பலாலி றோட், திருநெல்வேலி வடக்கு), எஸ்.சிறிதரன்(வாரிகுளம், சுன்னாகம்), எஸ்.பிரகாஷ்(கேணியடி கொக்குவில்),

வி.விேனாஜன்(முதலாவது ஒழுங்கை, யாழ்.றோட், உரும்பிராய்),எஸ். கிருஸ்நேஸ்வரன்(மிஷன் பாடசாலை வீதி, கோண்டாவில்), என்.ஜனார்த்தனன்(அம்பலவாணர் றோட், உடுவில் கிழக்கு), ஆர்.டி.வனஜா(சிவனடியார் றோட், சங்குவேலி வடக்கு), ரி.விஜயாலன்(வேட்டையார் வளவு உடுவில்),

எஸ்.சத்தியதீபன்(நீர்வேலி வடக்கு), வை. சிறிரங்கன்(ஏழாலை கிழக்கு), கே.குணாளன் (பாலாவி றோட், கொடிகாமம்), சி.ஜெயசுந்தரேஸ்வரர்(முதலாவது ஒழுங்கை, அம்பல் றோட், கொக்குவில் மேற்கு), எம்.முரளிதரன் (ஸ்ரேசன் றோட், கோண்டாவில் மேற்கு),

எஸ்.ஆதவன்(சங்கரத்தை, வட்டுக்கோட்டை), எஸ்.சிவகணேசன்(சங்கரப்பிள்ளை றோட், ஆனைக்கோட்டை), ரி.ஈசன்(வாரியகுளம், சுன்னாகம்), கே.யசோதராதேவி(கோப்பாய் வடக்கு, கோப்பாய்). (எ)

# மிதிவெடி அகற்றப்பட்ட இடங்கள் கையளிப்பு

மிதிவெடி அகற்றும் செயற்பாட்டு அலுவலகத்தினால் இம் மாதம் நாவற்குழி, சுன்னாகம், இருபாலை ஆகிய பிரதேசங்களில் மிதிவெடி அபாயம் என இனங்காணப்பட்ட பகுதிகளில் மிதிவெடிகள் அகற்றப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் தெரிவித்துள்ளது.

நாவற்குழி மேற்கில் கடந்த 2 ஆம் திகதி 34 ஆயிரத்து 299 சதுர மீற்றர்பரப்பில் 270 மிதிவெடிகளும் சுன்னாகம் நகரை அண்டிய பகுதியில் 23 ஆயிரத்து 859 சதுர மீற்றர் பரப்பில் 7 மிதிவெடிகளும் ரெனிஸ் மிதிவெடி அகற்றும் பிரிவினர்களால் அகற்றப்பட்டுள்ளது.

இருபாலை கிழக்கு குறுகிய நிலப்பரப்பில் மிதிவெடி அகற்றும் நடவடிக்கை ஹலோ றெஸ்ட் அமைப்பால் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்கள் பாவனைக்காக நேற்றுக் கையளிக்கப்பட்டது. (எ-133)

# கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் பயிற்சி பெற்று வரும் மாணவர்களுக்கும் போதனாசிரியர்களுக்கும் கடந்த மூன்று மாத காலமாக கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என மன்றத்தின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டில் அசாதாரண சூழல் காரணமாகவே மேற்படி மன்றத்தின் பல்வேறு செயற்திட்டங்கள் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார். (து-133)

# வாகனங்களுக்கான வாடகைக் கட்டணம் சிவில் அலுவலகத்தில் இன்று வழங்கப்படும்

## இராணுவம் அறிவிப்பு

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரின் பாவனைக்காக எடுக்கப்பட்ட அனைத்து தனியார் வாகனங்களுக்குமான வாடகைக் கட்டணத்தை இன்று யாழ்.சிவில் ஒருங்கிணைப்பு அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அலுவலகப் பொறுப்பதிகாரி கேணல் சில்வா தெரிவித்தார்.

வாகன உரிமையாளர்களின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம், வாகனத்தின் உரிமைப் புத்தகம் மற்றும் வரிப்பத்திரம்,காப்புறுதிப் பத்திரம் என்பவற்றின் போட்டோப் பிரதியுடன் உரிமையாளர்கள் இன்று தமது அலுவலகத்தில் வருகை தருமாறு அவர் கேட்டுள்ளார்.

மேற்கூறப்பட்ட ஆவணங்களுடன் அலுவலகத்திற்கு வருகை தரும் வாகன உரிமையாளர்களுக்கு உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் வாடகைக்கட்டணம் வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (எ-5)

# பூரணை விழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமத்தின் புரட்டாதி பூரணை விழா இன்று காலை9 மணிக்கு சாவல்கட்டு அந்திக்குழி ஞானவைரவர் அறநெறிப் பாடசாலையில் நடைபெறும்.

இவ்விழாவில் பஜனை, சிறப்பு ஆன்மீகஉரை, நாடகம் என்பன இடம்பெறவுள்ளன. (எ)

# போயா ஆன்மீக நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் இன்று போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவு பெறும். (எ)

# எரிபொருள் பெறுவதற்கு 5231 வாகனங்கள் பதிவு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலக பிரிவில் சுமார் 5 ஆயிரத்து 231 வாகன உரிமையாளர்க்ள் இதுவரையும் எரிபொருள் விநியோக அட்டைக்கு விண்ணப்பித்துள்ளனர்.

இதில் சங்கானைப் பிரதேச பிரிவில் பதிவு செய்யப்பட்ட 2 ஆயிரத்து 738 வாகனங்களில் 420 டீசல் வாகனங்களும் அடங்கும்.

இவற்றுள் பெற்றோல் வாகனங்களுக்கு 200 ரூபாவுக்கு பெற்றோல் சங்கானைப் பல நோக்குக் கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் 2 ஆயிரத்து 493 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கான பெற்றோல் மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள்நிரப்பு நிலையத்தில் வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (து-133)

# படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு உறுதிச் சான்றிதழ்

கடந்த ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதிக்குப் பின் யாழ்ப்பாணத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் படுகொலை தொடர்பாக உறுதிப்படுத்தி சான்றிதழ் வழங்க யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

அது தொடர்பான சான்றிதழ்களைப் பெற அவர்களின் உறவினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பின்வரும் நாட்களுக்கு சமுகமளிக்குமாறு யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளர் ரி.சுவேந்திரராஜா அறிவித்துள்ளார்.

படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்பங்களுக்கான எதிர்கால நன்மை கருதியே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

திகதிகளின் விபரம் வருமாறு,

இன்று யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்களின் குடும்பங்களும் நாளை 7 ஆம் திகதி வலிகாமம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் 9 ஆம் திகதி வடமராட்சியைச் சேர்ந்தவர்களும் தென்மராட்சிப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களும் 10 ஆம் திகதியும் 11 ஆம் திகதியும் தீவகப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் அலுவலகத்திற்கு சமுகமளித்து சான்றிதழ்களைப் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (எ-5)

# ஆசிரியர் செயலமர்வு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவ லகத்தினால் எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை நடத்தப்படவிருந்த அனைத்து செயலமர்வுகளும் பிற்போடப்பட்டுள்ளன.

நடைபெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (எ)

# கொக்குவில் கிழக்கில் சுற்றிவளைப்புத் தேடுதல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்குப் பகுதியில் நேற்றுப் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

அம்மன் வீதி, ஆடியபாதம் வீதி, பொற்பதி வீதி மற்றும புகையிரத நிலைய வீதி, 2 ஆம் ஒழுங்கை அடங்கலான பகுதிகளில் சுற்றி வளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

சுற்றிவளைப்புத் தேடுதல்களின்போது வீடுகள் சோதனைக்குட்படுத்தப்பட்டன. அங்கிருந்தவர்கள் குடும்பமாக கொக்குவில் நாமகள் வித்தியாலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு சில மணிநேரத்தின் பின் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இச்சுற்று வளைப்பின்போது எவரும் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படவில்லை. (எ)

# மரணமான மாணவியின் சடலத்தை வவுனியாவில் புதைக்க உத்தரவு

(வவுனியா)

முல்லைத்தீவு சிறுவர்இல்லம் செஞ்சோலை மீதான தாக்குதலில் காயமடைந்து பின்னர் மரணமான மாணவியின் சடலத்தை வவுனியாப் பூந்தோட்டம் இந்து மயானத்தில், நாளை மறுதினம் அடக்கம் செய்ய வேண்டும் என வவுனியா நீதிவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

விமானத் தாக்குதலில் காயமடைந்த மாணவி கண்டிக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது மரணமானார்.

அதன் பின்னர் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. தற்போது காரணம் எதுவும் கூறப்படாது சடலம் அநுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதேவேளை சமயச் சடங்குகளுக்காக மாணவியின் சடலத்தை அவரின்சொந்த இடமான விசுவமடுவுக்குக் கொண்டு செல்லவும் பின்னர் வவுனியா இந்து மயானத்தில் அடக்கம் செய்யவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (எ)

# அவசர காலச் சட்டம் மேலும் ஒரு மாதம் நீடிப்பு

அவசர காலச் சட்டம் மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது. நேற்று இது தொடர்பான வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து 156 வாக்குகளால் அவசர காலச் சட்டம் நீடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் மேலக மக்கள் முன்னணி என்பன பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி என்பன அரசுடன் இணைந்து பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர். (எ)

# சமாதானப் பேச்சுக் குறித்து புலிகள் உறுதியளிக்க வேண்டும்

## ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்கள் நல்ல முறையில் நடைபெற வேண்டுமானால் விடுதலைப்புலிகளிடமிருந்து உறுதி மொழிகளை அரசாங்கம் பெற வேண்டுமென ஜாதிக ஹெலஉறுமய தெரிவித்துள்ளது.

ஆயுதங்களைக் கைவிடல், தாக்குதல்களை நிறுத்துதல் மற்றும் தமிழீழக் கொள்கையை கைவிடல் போன்ற விடயங்கள் தொடர்பாக விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் எழுத்து மூலம் உறுதி வழங்க வேண்டும் என ஜாதிக ஹெலஉறுமயவின் பாராளுமன்றக் குழுத் தலைவர் எல்லாவெல மேதானந்த தேரர் கூறியுள்ளார்.

நோர்வே ஏற்பாட்டாளர்கள் விடுதலைப் புலிகளை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததாகவும் குற்றஞ்சுமத்தியுள்ளார். (எ)

எல்லோரும் பொறுமையைப் புகழத்தான் செய்வார்கள். ஆனால் துன்பத்தைத்தான் தாங்கிக் கொள்ள மாட்டார்கள்.

—அப்துல்-ரஹீம்

வலம்புரி

## மறுசீரமைக்கப்பட வேண்டிய பெற்றோல் விநியோகம்

வாகன எரிபொருள் பங்கீட்டு அட்டைக்கான பெற்றோல் விநியோகம் போதுமடா சாமி என்றாகி விட்டது.

எரிபொருள் விற்பனை நிலையங்களில் கால் கடுக்கக் காத்திருந்தும் பெற்றோலைப் பெற முடியாத பரிதாபம், யாழ்ப்பாண மக்களின் அவல வாழ்வுக்கு நல்லதோர் எடுத்துக் காட்டாகும்.

இருநூறு ரூபாவுக்கு பெற்றோல் வழங்குவதற்கு எடுத்த நடவடிக்கை பொதுமக்களிடையே சச்சரவுகளையும் மன கசப்புக்களையுமே ஏற்படுத்தியுள்ளது.

அரச பணியாளர்களுக்கு பெற்றோல் வழங்குவதற்கான நடைமுறைகள் வெற்றி தரவில்லை என்றே கூறவேண்டும்.

மேற்கூறப்பட்ட பிரச்சினைகள் யாவற்றுக்கும் பெற்றோலின் தட்டுப்பாடே காரணமாயினும் அரச பணியாளர்களுக்கான பெற்றோல் விநியோகத்தை குறிப்பிட்ட திணைக்களங்களின் ஊடாக விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் அது நெருக்கடியை தவிர்ப்பதற்கு ஏற்ற உபாயமாகவிருக்கும்.

அல்லது விடுமுறை தினங்களில் அரச பணியாளர்களுக்கான பெற்றோல் விநியோகத்தை மேற்கொண்டிருந்தாலும் கூட அரச பணியாளர்கள் லீவு எடுக்கும் சிக்கல்களிலிருந்து விடுபடக் கூடியதாக இருந்திருக்கும்.

இதைவிடுத்து பொதுமக்கள், அரச பணியாளர்கள் என்ற பிரிவிடல், எரிபொருள் நிலையங்களில் கடைப்பிடிக்கப்படுமாயின் அது பொதுமக்களிடையே மோதல்கள் கூட ஏற்படுவதற்கு ஏதுவாக அமையலாம்.

அதேநேரம் பொதுமக்கள் நீண்ட வரிசையில் நீண்ட நேரம் காத்திருப்பதைத் தவிர்ப்பதற்கு பிரஸ்தாப எரிபொருள் நிலையங்கள் பொருத்தமான நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இரண்டு மணித்தியாலங்களாக கொட்டு வெயிலில் காத்திருப்பவரிடம் 'இன்று பெற்றோல் தர முடியாது' 'பெற்றோல் முடிந்து விட்டது' என்ற வாசகங்களைப் பிரயோகிப்பது பொருத்தப்பாடானதல்ல.

இத்தகைய வசனப் பிரயோகங்கள் எரிபொருள் நிலையங்களையே சின்னாபின்னமாக்குவதற்கு காரணமாகிவிடும்.

வந்தபின்னர் வருந்துவதை விட வருமுன்னர் காக்கும் உபாயம் உத்தமானது. எனவே எரிபொருள் நிலையங்கள் 'டோக்கன்' நடைமுறையைப் பின்பற்றி வரிசையில் காத்திருக்கும் பொதுமக்களின் காத்திருப்பு - நேரம் வீணாகாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

இத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கான ஏற்பாடுகளை எரிபொருள் நிலையங்களின் முகாமைகள் செய்தாக வேண்டும்.

கூடவே எரிபொருள் பெறுவதற்கான அனுமதி அட்டைகளை சில பிரதேச செயலகங்கள் குறித்த எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு மட்டும் ஒதுக்கியிருப்பதால் அந்த எரிபொருள் நிலையங்கள் நல்லூர்த் தேர்த் திருவிழா போல் காட்சியளிக்கின்றன.

இவையாவும் சீராக்கப்பட வேண்டும். இத்தகைய பங்கீடுகள் சரியான முறையில் செய்யப்படவில்லையாயின் சிக்கல்கள், ஒழுங்கீனங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

## இலங்கைக்கு எதிரான ஐ.நா.தீர்மானம் இந்திய அரசாங்கம் எதிர்ப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைச் சபையில் இலங்கைக்கு எதிரான வரைபுத் தீர்மானத்தை எதிர்க்கும் நிலைப்பாட்டை இந்தியா கைவிட வேண்டும் என்று ஆசிய மனித உரிமைகள் ஆணையம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஆசிய மனித உரிமைகள் ஆணையம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு;

ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத்தில் இலங்கை தொடர்பில் வரைபுத் தீர்மானத்தை பின்லாந்து கொண்டு வந்துள்ளது.

இந்தத் தீர்மானத்தை எதிர்ப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது கவலையளிக்கிறது. பின்லாந்தின் தீர்மானத்தை ஏற்பது குறித்து ஐ.நா.மனித உரிமைகள் சபை இன்று முடிவு செய்ய வுள்ளது.

இலங்கையில் மனித உரிமைகளுக்கு அனைத்துத் தரப்பினரும் மதிப்பளிக்க வேண்டும். மனித உரிமை சட்டங்களை மீறுவதை உடனே முடிபுக்குக் கொண்டு வர வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் உறுதி செய்யப்பட வேண்டும்.

மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும். (எ-5)

## நாட்டின் முக்கிய சக்திகளாக ஆசிரியர்கள் விளங்குகின்றனர்

### ஜனாதிபதி விசேட செய்தி

(கொழும்பு)



இந்த நாட்டின் முக்கிய சக்திகளில் ஒன்றாக ஆசிரியர்கள் விளங்குகின்றனர். அவர்களுக்கு உரிய கௌரவம் அளிக்கப்பட வேண்டும் என சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்துள்ளசெய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

ஆசிரியர்கள் எமது நாட்டின் கல்வித்துறைக்கு ஆற்றும் பணி மகத்தானது. அவர்களை உரிய முறையில் கௌரவிக்க வேண்டியது இலங்கையர் அனைவரது கடமையாகும்.

எமது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆரம்ப காலத்தில் ஒன்றிணைக்கப்பட்ட ஐம்பெரும் சக்திகளில் ஆசிரியர்கள் முதலிடம் பெறுகின்றனர்.

அதற்கான கௌரவமும் அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. ஆசிரியர் தினத்தை நினைவுகூர்ந்து அவர்களை கௌரவிக்கும் நிகழ்வுகளை இன்று கல்வியமைச்சு நாடு முழுவதும் ஏற்பாடு செய்துள்ளது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அதேபோன்று 21 ஆம் நூற்றாண்டில் வளமான கல்வி இலக்கை வெற்றி கொண்டு சர்வதேச சவால்களுக்கு துணிவுடன் முகம் கொடுக்கக் கூடிய இளம் தலைமுறை ஒன்றை உருவாக்குவதற்கான பலமும் துணிவும் எமது ஆசிரியர் குலாத்துக்குக் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன் எனவும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

## அரசு-புலிகள் பேச்சுக் குறித்து மக்கள் விடுதலை முன்னணி கேள்வி

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அரசாங்கமானது எந்த அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது என ஜே.வி.பி. கேள்வி எழுப்பியுள்ளது.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் ஜே.வி.பி.பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கூறியதாவது;

எந்த அடிப்படையில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் பேச்சுக்களை நடத்தவுள்ளது என்பது எமக்குப் புரியவில்லை. ஜனாதிபதித் தேர்தலின்போது மக்கள் முன்வைத்த செயற்திட்டத்திலிருந்து மகிந்த ராஜபக்ஷவிலகினால் நாம் அரசாங்கத்துக்கான ஆதரவு குறித்துப் பரிசீலிப்போம்.

வரவு செலவுத்திட்ட அறிக்கை தொடர்பிலான எமது கட்சியின் பரிந்துரைகளை நாம் கையளிக்கவுள்ளோம். பயங்கரவாதமும் அந்நிய நாடுகளின் தலையீடும் மிகவும் பாரதூரமான விடயங்களாகும்.

ஆகையால்தான் நாட்டை மீளக் கட்டியெழுப்பவும் பயங்கரவாதத்தை முடிபுக்குக் கொண்டுவரவும் நாம் 20 அம்ச செயற்திட்டத்தை முன்வைத்தோம். ஆனால் அரசாங்கம் அதனை ஏற்கவில்லை.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஐந்தாண்டுகள் நிறைவடையும் போது தமிழீழ விடுதலைப்புலிகளின் தனி நிர்வாகத்துக்கான அங்கீகாரம் கிடைத்துவிடும்.

ஆகவே விடுதலைப்புலிகள் தொடர்ந்து யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடிக்கின்றனர். விடுதலைப்புலிகளுக்கு பலன் அளிக்கக் கூடிய வகையிலான ஒரு ஒப்பந்தத்தை அரசாங்கம் ஏன் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்.

வடக்குக் கிழக்கு மக்களுக்கான ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன.

நந்தன குலதிலக்கவை எமது கட்சியின் உறுப்பினராக நாம் கருதவில்லை.

அவர் எமது கட்சியின் முன்னாள்உறுப்பினர். அவர் கட்சிப் பொறுப்புகளிலிருந்து விலகிவிட்ட நிலையில் அவர் கட்சி உறுப்பினர் இல்லை என்றார் ரில்வின் சில்வா. (எ-5)

## உப்பு நீரில் பரிகரணம் செய்வதன் மூலம் தரமற்ற நெல்லினை தரமாக்கலாம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டு நெற்செய்கையாளர்களே!

தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலையில் வெளிமாவட்டங்களிலிருந்து தரமான விதை நெல்லினை பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த கால நெல் அறுவடையின்போது பெய்த மழை காரணமாக பெரும்பாலான விவசாயிகளினது அறுவடை செய்யப்பட்ட நெல் மழை நீரில் நனைந்தது. இவ்வாறு நனைந்த நெல்லினையயே காய வைத்தபின் விதைத் தேவைக்காக விவசாயிகள் சேமித்து வைத்திருந்தனர்.

இவ்வாறு சேமித்து வைக்கப்பட்ட தரம் குறைந்த நெல்லின் தரத்தை உப்பு நீரில் பரிகரணம் செய்வதன் மூலம் தரமானதாக்கிக் கொள்ளமுடியும்.

உப்பு பரிகரணம் செய்வதற்கு வசதியாக 210லீற்றர் கொள்வனவுடைய வெட்டிய அரை பரலினுள் காற்பங்கிற்கு நீரினை நிரப்ப வேண்டும். பின்னர் நீரினுள் ஒரு முட்டையினை இட வேண்டும்.

முட்டை நீரிலுள் அமிழ்ந்து போவதை அவதானிக்கலாம். அதே நேரத்தில் இன்னொரு பாத்திரத்தில் நீர் எடுக்கப்பட்டு அதனுள் உப்பினை இட்டு செறிவான உப்புக் கரசல் தயாரிக்க வேண்டும்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட செறிவான உப்புக்கரசலை முட்டையின் 1/5 பகுதி நீரின் மேலும் மிதக்கும் வரை பரலில் எடுக்கப்பட்ட நீரினுள் ஊற்ற வேண்டும்.

இந்நிலையில் விதை நெல்லாகப் பயன்படுத்தவுள்ள நெல்லினை இக் கரசலில் இடும்போது அரைவயிறன், சப்பி போன்றன மிதக்கும். நிரம்பிய நெல் மணிகள் கரசலில் அமிழ்ந்து விடும்.

மிதக்கும் அரைவயிறன், சப்பி என்பவற்றை முதலில் அகற்றி நீரில் கழுவிக் காயவைத்தபின்னர் உணவுத் தேவைக்குப் பயன்படுத்தலாம். அமிழ்ந்திருக்கும் நெல்லினை வடித்தெடுத்து உப்பு நீங்கும் வரை நன்றாகக் கழுவிய பின்னர் நேரடியாக வயல்களில் விதைக்க முடியும்.

இப்பரிகரணம் மூலம் விதை நெல்லின் தரம் மேம்படுகிறது. ஆகவே உப்பு நீர் பரிகரண மூலம் கையிருப்பிலிருக்கும் நெல்லின் தரத்தினை மேம்படுத்தி நெற்செய்கையில் ஏற்படும் செலவினைக் குறைப்பதுடன் அதிகரித்த விளைச்சலினையும் பெற்றுப் பயன்பெறுவோம்.

இ.சௌந்தரராஜன்,
பாடவிதான உத்தியோகஸ்தர்,
பிரதி விவசாயப் பணிப்பாளர்(விரி) அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

# இரத்தத்திற்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு 'எ' நெகறிவ் அல்லது 'ஓ' நெகறிவ் இரத்தம் அவசரமாக தேவைப் படுவதாக இரத்த வங்கியின் வைத்திய அதி காரி உமாசங்கர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக குருதி நன்கொடையா ளர்கள் கவனத்தில் எடுத்து இரத்தத்தை வழங்க முன்வரவேண்டுமென அவர் கேட் டுள்ளார்.

இரத்த வகைகளை தெரியாதவர்களும் தம்மு டன் தொடர்பு கொண்டு இரத்தத்தின் வகை யைத் தெரிந்து கொண்ட பின்னர் இரத்த தானத்தை மேற்கொள்ளலாம் என அவர் தெரிவித்தார். (எ-5)

# நான்காம் கட்ட உணவுப் பொருட்கள் பணத்திற்கே பெற்றுக்கொள்ள முடியும்

## இலவச விநியோகம் அடுத்த கட்டத்தில்

நான்காம் கட்டமாக வழங்கப்படும் உணவுப் பொருட்களை அனைத்து குடும்ப அட்டை வைத்திருப்பவர்களும் பணம் கொடுத்தே பெற்றுக் கொள்ள வேண்டுமென அறிவிக் கப்பட்டுள்ளது.

இப் பொருட்கள் நிவாரணமாக வழங் கப்படமாட்டாது. அனைத்து குடும்ப அட்டை களுக்கும் பணம் பெற்றே பொருட்கள் வழங் கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இலவச நிவாரணம் அடுத்தகட் டமாக வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. நான்காம் கட்டமாக வழங்கப்படும் பொருட் களுக்கான விலைகள் யாழ்.அரச அதிபரி னால் அறிவிக்கப்பட்டுள்ளது. அவை வரு மாறு;

அரிசி 40 ரூபா,கோதுமை மா 40 ரூபா, சீனி 68 ரூபா ,பருப்பு 68 ரூபா,மரக்கறி எண்ணெய் 68 ரூபா ,அங்கர் (1+) 171 ரூபா அங்கர் (3+) 173 ரூபா ,லக்டோஜன் (1) 225 ரூபா , லக்டோஜன் (2) 205ரூபா ,அங்கர் 165 ரூபா ,நெஸ்பிறே 175 ரூபா ,டைமன் 400 கிராம் 155 ரூபா , ஒரு கிலோ கிராம் 362 ரூபா, நெஸ்ரமோல்ட் 165 ரூபா.

இதேவேளை இவ் விலைகளுக்கு மேல திகமாக ஒரு சதத்தையேனும் வழங்கவேண் டாமெனவும் இப் பொருட்களுக்கான விநி யோகம் அடுத்த ஒரு சில தினங்களில் வழங்கப் படும் எனவும் அரச அதிபர் தெரிவித்தார். (எ-5)

# ஹான்சன் பௌயர் புதுடில்லி பயணம்

நோர்வேயின் விசேட சமாதானத் தூது வர் ஜோன் ஹான்சன் பௌயர் நேற்று மதி யம் புதுடில்லிக்குப் பயணமானார்.

சிறிலங்கன் எயார் லைன்ஸ் விமானம் மூலம் அவர் இந்தியா சென்றார். அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையிலான நேர டிப்பேச்சுக்கள் குறித்து விளக்கமளிக்க அவர் இந்தியாவிற்குச் சென்றுள்ளார்.

இதேவேளை அடுத்த வாரம் இலங்கை வரவுள்ள நோர்வேயின் சிறப்புத்தூதுவர் எரிக்சொல் ஹெய்முடன் அவர் மீண்டும் வருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஏ)

# முகமாலைப்...

மேற்கொண்டதாகவும் தெரி வித்தார்.

தொடர்ந்து நேற்றுப் பிற்பகல் 12.20 மணிக்கு கிளாலியில் தமது பாதுகாப்பு நிலை கள் மீது விடுதலைப்புலிகள் நடத்திய ஆட் லறித் தாக்குதலில் 9 இராணுவத்தினர் படு காயமடைந்தனர்.

இதேவேளை நேற்றுக் காலை 10.15 மணியளவில் பளைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் இனங்கண்ட இலக்குகள் மீது விமானப்படைக்கு சொந்தமான கிபீர் விமா னங்கள் தாக்குதல் நடத்தியதாகவும் பிரிகேடி யர் பிரசாத் சமரசிங்க மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நேற்று இரவு விடுதலைப் புலிகளின் பகுதிகள் நோக்கி இராணுவத்தி னரால் பல்குழல் தாக்குதல்கள் மேற்கொள் ளப்பட்டன. (எ-5)

# வவுனியாவில்...

உயிரிழந்துள்ளார்.

இத் தாக்குதல் சம்பவம் நேற்றுக் காலை இடம் பெற்றுள்ளது. இதில் மேலும் இருவர் படுகாயமடைந்தனர். வீதிக்கண்காணிப்பில் ஈடுபட்டபடையினர் மீதே இத்தாக்குதல் நடத் தப்பட்டது. (ஏ)

# எரிபொருட்களின்...

ரூபாவாலும் டீசல் 2 ரூபா 50 சதத்தாலும் குறைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை சிகரட் 50 சதத்தாலும் மது பானப்போத்தல் ஒன்று 15 ரூபாவாலும் அதிக ரிக்கப்பட்டுள்ளன. (ஏ)

# சமாதான பேச்சுகளுக்கான இடம் தீர்மானிக்கப்படவில்லை

## தயாமாஸ்டர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

சமாதானப் பேச்சுக்கள் நடைபெறும் இடம் குறித்து விடுதலைப்புலிகள் எந்தவித முடிவும் எடுக்கவில்லை என விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயாமாஸ்டர் தெரிவித்துள்ளார்.

பேச்சுக்கான திகதிகள் குறித்தே நோர்வேயின் விசேட தூதுவருடனான சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

எனினும் அரசு ஜெனீவாவில் நடத்தவுள்ளதாக நோர்வேயிடம் தெரிவித்துள்ளது.

அது குறித்து உத்தியோகபூர்வமான தமக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் தயாமாஸ்டர் தெரிவித்தார்.

இதேவேளை சமாதானப் பேச்சுக்களை ஒஸ்லோவில் நடத்துவதற்கு விடுதலைப்புலி கள் தீர்மானித்துள்ளதாக விடயமறிந்த வட் டாரங்கள் தெரிவித்தன. (ஏ)

# சமாதானப் பேச்சுவார்த்தைகள்...

விடுதலைப்புலிகள் தெரிவித்தி ருந்த கருத் துக்களை அமைச்சரவை உறுப்பினர்க ளிடம் மகிந்த ராஜபக்ஷ எடுத்துக் கூறினார்.

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான அடிப்படை விடயங்கள் பற்றிப் பேச புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளதைக் கருத்தில் கொண்டு பேச்சுவார்த்தைக்கான இடத்தையும் நாளையும் அரசாங்கம் முன்வைத்துள்ளது.

இதுபற்றி அமைச்சர் நோர்வேயின் விசேட தூதுவரிடம் நிமால் சிறிபால டி சில்வா நேற்று தெளிவாக எடுத்துக் கூறினார்.

விடுதலைப்புலிகள் அனைத்துப் பயங் கரவாத நடவடிக்கைகளையும் கைவிட வேண் டும். அரசாங்கம் எப்போதும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை மதித்தே நடக்கின்றது.

பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகை யில் இனியும் அவ்வாறே தொடர்ந்தும் செயற் படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எப் போதாவது யுத்த நிறுத்த மீறல் நடவடிக்கை களை தமிழீழ விடுதலைப்புலிகள் ஈடுபட்டால் அதற்கு பதில் நடவடிக்கை கொள்ளும் உரி மை அரசாங்கத்திற்கு உண்டு என்றும் வலி யுறுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் நிலைப்பாட்டை புலிகளி டம் தெரிவித்த பின்னர் இது தொடர்பான அவர்களது கருத்தை இன்னும் சில நாட்களில் அரசாங்கத்திற்கு தெரிவிப்பதாக நோர்வே சிறப்புத்தூதுவர் உறுதியளித்தார் என்று அர சாங்க தகவல் திணைக்கள செய்திக்குறிப் பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

# பாதுகாப்பு அமைச்சிற்கு...

பில்லியனான அதிகரித் துள்ளது.2006 ஆம் ஆண்டு செலவீனம் ரூபா 568.3 பில்லியனாக இருந்தது.

பாதுகாப்பு அமைச்சிற்கு மட்டும் 2007 ஆம் ஆண்டு 45 வீதம் கூடுதலாக நிதி ஒதுக் கப்பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டு ரூபா 97.21பில்லியன் இராணுவத்திற்கு ஒதுக்கப் பட்டிருந்தது 2007ஆம் ஆண்டு இத் தொகை ரூபா 139.55 பில்லியனாக அதி கரிக்கப்படவுள்ளது.

பொலிஸ் உள்ளிட்ட அனைத்து பாதுகாப் புத்தொடர்பிலான செலவீனங்களுக்குமே இத் தொகை என்று திறைசேரி பிரதிச்செய லாளர் ஆர். ஏ.ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பாரியளவிலான ஊதிய உயர்வும் நடை முறைப்படுத்தப்படவுள்ளதென இது வெளிப் படுகிறது என்றும் அவர் கூறினார்.

இரண்டாவது உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சுக்கு அதிகம் ஒதுக் கப்பட்டுள்ளது. 10 ஆயிரத்து 366 கோடி ரூபாவிற்கு மேற்பட்ட தொகையே அவ் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சிற்கு 4 ஆயிரத்து 117 கோடி ரூபாவும் மின்வலு எரிசக்தி அமைச்சிற்கு 5 ஆயிரத்து 119 கோடி ரூபா வும் ஒதுக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச் சிற்கு 4 ஆயிரத்து 325 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (ஏ)

# பகிஷ்கரிப்புப் போராட்டம்...

னைகளை ஏற்றுக்கொண்ட அவர்கள் அரசுக்கு அழுத்தம் கொடுத்து எமக்குரிய தீர்வினை விரைவாகப் பெற்றுத் தருவதாக உறுதியளித்தனர்.

இது தொடர்பாக உடனடி நடவடிக்கை களை மேற்கொள்ளக்கோரி சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் அவர்கள் பகிரங்க வேண்டு கோள்களை விடுத்துள்ளனர்.

தமிழ் மாணவர்களின் ஒருமித்த சக்தி என்ற வகையில் எதிர்வரும் க.பொ.த.சாதா ரண தரப்பரீட்சை ,புலமைப்பரிசில் பரீட்சை போன்றவற்றை கருத்திற் கொண்டு அரசின் மீதான மிகுந்த அதிருப்தியோடும் வெறுப் போடும் எதிர்வரும் 09.10.2006 திங்கட்கிழ மை க.பொ.த.சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களும் ,ஏனையோரும் 11.10.2006 புதன்கிழமையும் பாடசாலைக்கு சமுகமளிக்க உத்தேசித்துள்ளோம்.

எனினும் மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று கற்றலில் ஈடுபடுவது பல்வேறு இடர் களைத் தந்தாலும் சற்றுப் பொறுமைகாத்து கல்வியைத் தொடருமாறும் தடையாகவுள்ள விடயங்கள் தொடர்பாக உரிய தரப்புக்களுக்கு பல்வேறு பட்ட வழிகளில் பிரச்சினைகளைத் தெளிவுபடுத்தி உரிய தீர்வுக்காக தமிழ் மாண வர் ஒன்றியம் தொடர்ந்தும் போராடும் என் பதைத் தெரிவிக்கின்றோம்.

எமது கற்றல் தவிர்ப்புப் போராட்டத்திற்கு பூரண ஆதரவு நல்கிய ஒட்டு மொத்த கல்விச் சமூகத்திற்கும் மனமார்ந்த நன்றியைத் தெரி விப்பதோடும் அரசிடம் இருந்து எமது கோரிக் கைக்கான தீர்வினைப் பெற்றுத்தர சம்பந்தப் பட்டவர்கள் உடன் முயற்சி எடுக்கவேண்டு மெனவும் தமிழ் மாணவர் ஒன்றியம் வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (ஏ)

# ஒத்துழைப்புடன் இணைந்து...

அரசாங்கத்தின் பங்காளிகளாக நாம் மாறியுள்ளோம். ஆனால் எந்தவொரு பத விகள் எதனையும் ஏற்றுக்கொள்ள மாட் டோம் எனவும் கருஜெயசூரிய குறிப்பிட்டார்.

தேசிய இனப்பிரச்சினை மற்றும் மிக முக்கியமாக நாட்டில் நிலவுகின்ற பிரச்சினை களை பொது வேலைத்திட்டத்துடன் தீர்ப்பதற் காவே இவ் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ள தாகவும் கருஜெயசூரிய கூறினார்.

அவுஸ்திரேலியா சென்றுள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க நாடு திரும்பியவுடன் கட்சியின் அரசி யல்குழு ,உயர் மட்டக்குழுவில் இதற்கான அனுமதியைப் பெற்று எதிர்வரும் 15 ஆம் திகதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவோம் என வும் அவர் தெரிவித்தார். இதற்கிடையில் இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு திருப்புமுனை எதிர்க்கட்சி இல்லாத ஓர் ஜனநாயக அரசு ஏற்படுத்தப்பட் டுள்ளது.

கடந்த மாதம் 15 ஆம் திகதியிலிருந்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து பிர தமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தலைமை யிலான குழுவினரும் ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் கருஜெயசூரிய தலைமையிலான குழுவினரும் பேச்சுவார்த்தை நடத்தி வந்தனர்.

இப் பேச்சுவார்த்தையில் இணக்கப்பாடு காண்பதற்காக ஆறு உப குழுக்கள் அமைக் கப்பட்டு அக் குழுக்கள் ஊடாக ஆராயப் பட்டு அதன் பின்னரே இவ் இணக்கப்பாட் டிற்கு இரு பிரதான கட்சிகளும் வந்துள்ளன.

இந்த உப குழுக்கள் பொருளாதாரம், இனப்பிரச்சினை,அரசியல் மறுசீரமைப்புப் போன்ற பல்வேறு விடயங்களை ஆராய்ந்து அது தொடர்பில் இவ் விரண்டு கட்சிகளும் ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்ததாக பேராசிரி யர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எனினும் இரு கட்சிகளும் தனித்துவத்தை விட்டுக்கொடுக்க முடியாதெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-5,10)


## முதலாம் ஆண்டு நினைவு நாள்

மலர்வு 06 ✦ 12 ✦ 1926



உதிர்வு 17 ✦ 10 ✦ 2005

அமரர் திருமதி இலக்குமி அம்மா சோமநாதர்

(அழக்கா)

அவனியை விட்டகன்று ஓராண்டு கழிந்ததம்மா
ஆறாது துயரமது தாங்கள் ஆற்றிய
கடமையை எண்ணியம்மா
ஓயாத உங்கள் பணி ஒருலகில் மட்டுமன்றி
ஈருலகும் எட்டுமது உங்கள் ஈகை அது பேசுமம்மா

"தேவதானம்"
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

உங்கள் ஆத்மசாந்திக்காய்
பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்

(456)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.8 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.10.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.